நண்பகல் 12–00

5. துணை வினாவிற்கு உணவுத்துறை அமைச்சர் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே கேள்வி நேரத்தின்போது, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. தங்கவேல் அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள். அது உண்மைக்குப் புறம்பான தகவல். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய மகனுக்கு குடும்ப அட்டை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய மகன் பாரதி அவர்களுக்கு உரிய ஆய்வுகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, 10–2–2014 அன்று அரிசி பெறும் தகுதியுடைய புதிய குடும்ப அட்டை, திருப்பூர் வட்ட வழங்கல் அலுவலகம்மூலம் வழங்கப்பட்டுவிட்டது என்பதனை இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குடும்ப அட்டை எண் 33G0080448 என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.

திருமதி ஆர். ராஜலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிற்கும், பரிவிற்கும்; ஆற்றலுக்கும், தேற்றலுக்கும்; பண்பிற்கும், பாசத்திற்கும்; வீரத்திற்கும், தீரத்திற்கும்; தெளிவிற்கும், தீர்க்கத்திற்கும்; தர்க்கத்திற்கும், தர்மத்திற்கும்; துணிவிற்கும், பணிவிற்கும்; அமைதிக்கும்,